(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 செப்தெம்பர் 01 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 செப்தெம்பர் 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2022 செப்தெம்பர் 09, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 23/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.30/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கண்டங்கத்திரியை உள்நாட்டில் செய்கை செய்தல்,— கடந்த சில ஆண்டுகளாக கண்டங்கத்திரியை இறக்குமதி செய்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் அந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உள்நாட்டில் கண்டங்கத்திரி செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.31/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— இஞ்சி செய்கையினை முன்னேற்றுதல்,— கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பெருமளவு பணம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவும், இஞ்சி செய்கையினை உள்நாட்டில் முன்னேற்றுவதற்காகவும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 32/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும்இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2022 மே 31 ஆம் திகதிய 2282/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 2291/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2022 செப்தெம்பர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2551/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2565/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா மினரல் சேன்ட் லிமிடெட் நிறுவனத்தின் புல்மோட்டை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் இல்மனைட் ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அத்தகைய இல்மனைட் ஏற்றுமதியால் ஈட்டப்பட்ட அன்னியச் செலாவணி எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கையில் இல்மனைட்டைப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவ்வாறு உற்பத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ள பொருட்களின் வகைகள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் புல்மோட்டை தொழிற்சாலையில் உள்ள இல்மனைட் இருப்பின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2576/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் யானை – மனித மோதல் காணப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அப் பிரிவுகளில் இன்றளவில் நடமாடுகின்ற காட்டு யானைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2583/2022

கௌரவ லலித் வர்ண குமார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சாரதிகளுக்காக "ரிய சக்தி" என்ற பெயரில் சலுகைக் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்காக இதுவரை கிடைத்துள்ள விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி விண்ணப்பதாரிகளுக்கு மத்தியில் இன்றளவில் கடன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இக்கடன் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2587/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களில் நிலவும் சாரதி மற்றும் நடத்துநர் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகளின்போது, குறிப்பிட்ட வெற்றிடங்கள் காணப்படும் டிப்போ அமைந்துள்ள மாவட்டத்தினுள் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர்களை மாத்திரம் ஆட்சேர்ப்பதன் மூலம் சம்பளமற்ற லீவு பெறுவதும் சேவையிலிருந்து தாமே விலகிச் செல்வதும் குறைவடையும் என்பதையும்;

(ii) இதன் மூலம் இவர்களிடமிருந்து மிகவும் பயனுறுதியானதும் தரமானதுமான சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும்;

(iii) அதனூடாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வினைத்திறன்மிக்கதும் போட்டித்தன்மைமிக்கதுமான பயணிகள் போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கான இயலுமை காணப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்போது, குறிப்பிட்ட வெற்றிடங்கள் காணப்பட்ட டிப்போ அமைந்துள்ள மாவட்டத்தினுள் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர்களை மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2602/2022

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொல்கஹவெல - குருநாகல் புகையிரதப் பாதையை, இரட்டை வழிப் பாதையாக மாற்றும் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான சாத்தியவள அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள மற்றும் நிறைவு செய்யப்படவுள்ள திகதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2614/2022

கௌரவ அனுப பஸ்குவல்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மிருகக்காட்சிசாலைகள் ஊடாக குறிப்பிடத்தக்க வருமானம் ஈட்டப்படுகின்றதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி மிருகக்காட்சிசாலைகளில் உள்ள விலங்குகளுக்குத் தேவையான உணவுகளில் தட்டுப்பாடு காணப்படுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள மிருகக்காட்சிசாலைகள் ஊடாக தற்போது ஈட்டப்படும் வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) அனர்த்த நிலைமைகளின் போது மிருகக்காட்சிசாலைகளிலுள்ள விலங்குகளுக்குத் தேவையான வசதிகளை மேற்படி வருமானத்தில் வழங்குவதற்கான வழிமுறையொன்றை முன்மொழிவாரா என்பதையும்;

(iii) இலங்கையின் வனசீவராசிகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2621/2022

கௌரவ டீ. வீரசிங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருந்துகளின் விலை தற்போது அதிகரித்துள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மருந்துகளை இறக்குமதி செய்யும் போது தீர்வை வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iii) இல்லையெனில், மருந்துகளுக்கு அதிக விலைகள் அறவிடப்படுவது தொடர்பில் பரிசோதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விற்பனையாளர்கள் ஒரே வகை மருந்துக்கு பல்வேறு விலைகளை அறவிடுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி விற்பனையாளர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2629/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் தாபிக்கப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி ஒவ்வொரு சுற்றுலா வலயத்தையும் அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2640/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளின் அளவு, ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் இன்றளவில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள காணி உரிமைப் பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) எதிர்காலத்திலும் அவ்வாறு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 செப்தெம்பர் 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கென கொள்ளப்படுகின்ற காணிகளுக்காகச் செலுத்தவேண்டிய இழப்பீடுகளையும் பிற நிருவாகச் செலவுகளையும் உரிய நிறுவனம் ஏற்க வேண்டும் என்பதையும்;

(ii) ஆயினும், அந் நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற நிதி அக்கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச் சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றல் செய்வதற்கான வழிமுறை;

(ii) அதற்கு ஏற்புடைய சட்டம்;

என்பன யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமை மாற்றல் சான்றிதழ் ஒன்றின் ஊடாக அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு காணி அமைச்சினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு பணிப்புரை வழங்குவதானது மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள், காணிக் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், இந்த நிலைமையைச் சீராக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

28/2022

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயற்கையாக வளரும் மனித நுகர்வுக்கு உகந்த காளான்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி காளான் வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) இவற்றில் அகணிய காளான் வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் சுயதொழிலாக காளான் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நாடுகள் யாவை;

(iii) இதற்காக ஒரு வருடத்துக்கு செலவிடப்படும் நிதித்தொகை யாது;

(iv) சுதேச காளான் விதைகளை பயிர்ச்செய்கையாளர்கள் மத்தியில் பிரபல்யப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை ;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) காளான் பயிர்ச்செய்கையாளர்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

296/2022

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹந்தானை முதல் சுதுஹும்பொல வரை நீர் பாய்ந்தோடும் கால்வாயொன்று உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கால்வாய் தடைப்படும் வகையில் சில இடங்களில் அனுமதியற்ற கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மழைக் காலங்களில் மேற்படி கால்வாய் தடைப்படுவதனால் அதனைச் சூழவுள்ள மக்களின் வீடுகள் நீரில் மூழ்கின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கால்வாய் தடைப்படுவதன் மூலம் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்படும் சுதுஹும்பொல பிரதேசத்தைச் சூழவுள்ள குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படும் நிரந்தரத் தீர்வு யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

342/2022

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் நிகழ்கின்ற சுற்றாடல் மாசுபாட்டுடன் சம்பந்தப்பட்டதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) முறைப்பாட்டு வகைப்படுத்தலுக்கமைய, அத்தகைய முறைப்பாடுகளில் எவ்வகை முறைப்பாடுகள் அதிகம் கிடைத்துள்ளன என்பதையும்;

(iii) மேற்படி (i)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அம்முறைப்பாடுகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முழுமையான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந் நிறுவனங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரபையின் சட்ட விதிகளுக்கு அமைவாக செயலாற்றி உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இரத்தினபுரி மாநகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபாடு குறித்து ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தண்ணீரில் பார உலோகங்கள் கலப்பு, வளி மாசுபாடு மற்றும் ஒலி மாசுபாடு தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய பரிசோதனைகளின்படி எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் யாவை என்பதையும்;

(iv) தேசிய சூழல் சட்டத்திற்கு அமைய வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டுள்ளதன் காரணமாக, தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

674/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில், ஹிங்குரக்கொட உட்பட்ட பல பிரதேசங்களில் வசிக்கும் பெரும்பாலான குடும்பங்கள் அலங்கார மலர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) அத்தகைய மலர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்களையும், மலர்களுக்கென நிலையானதொரு விலை இல்லாமை காரணமாக இவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும் அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2645/2022

கௌரவ காமினி வலேபொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இரசாயன பசளைக்கான தடை காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல், தேயிலை, இறப்பர், கறுவா, தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற ஒவ்வொரு பயிர் வகையினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தனித் தனியே யாதென்பதையும்;

(iii) இரசாயனப் பசளையை தடை செய்ததன் காரணமாக விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகி உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2648/2022

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில வருடங்களுக்கு முன்னர் “விவசாய ஏற்றுமதி கிராமம்” என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) தற்போது அந்நிகழ்ச்சித்திட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், “விவசாய ஏற்றுமதி கிராமம்” நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டு வருவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2658/2022

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய சக்தி மின் கட்டமைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொது மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர் என்பதையும்;

(ii) ஆயினும் சூரிய படலங்கள் (பெனல்) மற்றும் மாறுதிசையாக்கிகளின் (இன்வெர்ட்டர்களின்) விலைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக சூரிய சக்தி மின் கட்டமைப்புகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சூரிய சக்தி மின் கட்டமைப்புகள், சூரிய படலங்கள் மற்றும் மாறுதிசையாக்கிகள் உட்பட தேவையான உபகரணங்களை கட்டுப்படியான விலைகளில் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) சூரிய சக்தி மின் கட்டமைப்புகளை பொருத்தும் நிறுவனங்களால் பல்வேறுபட்ட விலைகளில் அவை விற்பனை செய்யப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கட்டமைப்புகளுக்கு நிலையான விலையொன்றை விதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி மின் கட்டமைப்புகளுக்கு, இலங்கை மின்சார சபையின் இணைப்பை வழங்குவதில் நிலவுகின்ற தாமதத்தை தவிர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2669/2022

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களில் இன்றளவில் கொவிட்-19 நோய்க்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) கொவிட்-19 நோய்க்கான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம் இன்றளவில் பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2689/2022

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளையும் தனியார்மயமாக்கப்பட்டிருந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தையும் அப்போதைய அப்பலோ வைத்தியசாலையையும் மீண்டும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்குமாறு உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் இவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக 2016.08.23 ஆம் திகதி என்னால் வாய்மூல விடைக்கான வினாவொன்று கேட்கப்பட்டதென்பதையும்;

(ii) கடந்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத்தினால் சட்டமா அதிபர் திணைக்களம் அது தொடர்பில் சீ.ஆர்.ஐ/159/2016 எனும் இலக்கத்தின் கீழ் மீண்டும் கோப்பு ஒன்றினை ஆரம்பித்து 55 நபர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதோடு இன்னும் சிலரிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக மேற்படி வினாவிற்கு பதில் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அதன் பிரகாரம், விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்து தகவல் பதிவேட்டிலிருந்து எடுபகுதிகள் கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறாயின், அதன் பின்னர் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 செப்தெம்பர் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

967/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை;

(ii) குறித்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை;

(iii) அதற்கென முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அத்தொகையை முதலீடு செய்த திகதி;

(iv) அதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலை தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெறுவதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1107/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iii) பிணைமுறி மோசடியுடன் நேரடியாக தொடர்புடைய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1514/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2018 உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட வெளிக்கள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரும் சேவையாற்றிய நிறுவனம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவையென்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிக்கள அலுவலர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்து அப்போதைய அரசாங்கம் கொண்டுவந்த சட்டங்களின் காரணமாக (அ)(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) தொடர்புடைய சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அத்திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1526/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாவெவ, பென்னும அரசாங்க வைத்தியசாலையானது மகாவலி இயக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டதொரு வைத்தியசாலை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையின் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் கட்டடங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1672/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தோட்டப்புறங்களில் வாழும் குடும்பங்களில் தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தோட்டப்புறங்களில் வாழும் அதிகளவான குடும்பங்களுக்கு சமுர்த்தி அனுகூலத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1895/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சேதனப் பசளையை பிரபல்யப்படுத்தும் வேலைத்திட்டம் காரணமாக 2022 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில் நெல் அறுவடையானது பாரியளவில் குறைவடைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்காக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இன்றளவில் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இது வரையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(v) நட்டஈடு வழங்குகையில் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2000/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதையும்;

(ii) அதன் காரணமாக வாகன உரிமையாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களுக்கான இறக்குமதி வரையறுக்கப் பட்டுள்ளமை மேற்குறித்த தட்டுப்பாட்டிற்கு காரணமாகியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2042/2022

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களில் மறுசீரமைப்பொன்று இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) அதன்போது, அரச தோட்டங்கள் 22 பிராந்திய பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) அத்தகைய கம்பெனிகளில் பல, தற்போது தமது குத்தகையை வேறு கம்பெனிகளுக்கு கைமாற்றியிருப்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரச தோட்டங்களை குத்தகைக்கு எடுத்த, பிராந்திய பெருந்தோட்டக் கம்பெனிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குத்தகை ஒப்பந்த அடிப்படையில் இன்றளவில் தோட்டங்களை நடத்தி வருகின்ற கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2060/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை சீமேந்துத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2170/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கலென்பிந்துனுவெவ பிரதேசத்தின் கெட்டலாவ, துட்டுவெவ, திசாவெவ மற்றும் மயில்கஸ்வெவ ஆகிய பிரதேசங்களில் பாரிய அளவில் வெங்காயம் பயிரிடப்பட்டது என்பதையும்;

(ii) வெங்காயத்திற்கு உரிய விலை கிடைக்காத காரணத்தினால் வெங்காயம் அதிகளவில் தற்போது விவசாயிகளின் வீடுகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளால் களஞ்சியப்படுத்தப்பட்ட வெங்காயத்தினை விற்பனை செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2022 ஒக்தோபர் 04, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2518/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரலாற்று ரீதியிலும் தொல்பொருள் ரீதியிலும் பெறுமதிமிக்க குருநாகல் புவனேக்க ஹோட்டல் இடிக்கப்பட்டமை தொடர்பில் பாரிய கருத்தாடல் இடம்பெற்றது என்பதையும்;

(ii) அது தொடர்பான வழக்கு விசாரணை தற்போது நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வழக்கிற்காக குருநாகல் மாநகர சபையால் செலவு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத் தொகை தொடர்பில் கணக்காய்வு ஐயவினாக்கள் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் வினவப்பட்டுள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி விடயங்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்?

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2533/2022

கௌரவ தவராஜா கலை அரசன்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சொறிக்கல்முனை - 2, சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மயிலைத்தீவு, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனங்காடு, கண்ணகி கிராமம் மற்றும் அலிகம்பை போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டிருப்பதனை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கிராமங்களில் வாழும் குடும்பங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டினை எதிர்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இக்கிராமங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாவிதன்வெளி, மத்திய முகாம், மண்டூர், கணேசபுரம், வக்கிஎல, நாமல் ஓயா, இங்கினியாகல மற்றும் தொட்டம போன்ற இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிகள் நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதன் காரணமாக அவற்றை அண்டிய கிராமங்களில் வாழும் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கி உள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இக்கிராமங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2536/2022

கௌரவ மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறுநீரக நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2552/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சனாதிபதி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2567/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நூதனசாலையைத் தாபிக்கும் பணிகள் இன்றளவில் முடிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி நூதனசாலையைத் தாபிப்பதற்காக செலவிடும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நூதனசாலையில் உள்ள அரும்பொருட்கள் தொடர்பில் முறையான ஆவணம் பேணப்படுகிறதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அந்த ஆவணத்தைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக மேற்படி நூதனசாலை திறந்துவைக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நூதனசாலையை பொது மக்கள் பார்வையிடுவதற்காக திறந்துவைப்பதில் சிக்கல் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2584/2022

கௌரவ லலித் வர்ண குமார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளரொருவருக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த உதவித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) உதவித் தொகை பெறுவதற்கு இன்றளவில் விண்ணப்பித்துள்ள சிறுநீரக நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) உதவித் தொகை பெறுவதற்கு இன்றளவில் காத்திருப்பு பட்டியலில் இடம்பெற்றுள்ள சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இன்றளவில் உதவித் தொகை பெறுகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2588/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் சாரண மாணவ/மாணவிகள் பயிற்றுவிக்கப் படுகின்றனர் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) சாரண மாணவ/மாணவிகளுக்கான பயிற்சியை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பாடசாலைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) மேற்படி பயிற்சியை வழங்குவதற்கு குறிப்பிட்ட பாடசாலைகளில் காணப்படும் தடைகள் இனங்காணப்பட்டுள்ளனவா;

(v) சாரணர்களை பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்கி, அந்த ஆசிரியர்களைக்கொண்டு பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு சாரணர் பயிற்சியை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சாரண மாணவ/மாணவிகள் சமூக உபசரணை சேவைகளில் ஈடுபடுத்தப்படும் விதம் யாது;

(ii) இதற்காக வழங்கப்படும் வசதிகள் சாரண மாணவ மாணவிகளுக்கு ஏற்ப வெவ்வேறாக யாவை;

(iii) சாரண மாணவ/மாணவிகளுக்கு தற்போது வழங்கப்படும் வசதிகள் போதியதாக உள்ளனவா;

(iv) இல்லையெனில், எதிர்காலத்தில் குறிப்பிட்ட வசதிகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(v) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2603/2022

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் இன்று வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களில் அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அரசியல் பழிவாங்கல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஊழியர் இடமாற்றங்கள் மற்றும் பணித் தடைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் தொழிலைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2615/2022

கௌரவ அனுப பஸ்குவல்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள பாரிய குளங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி குளங்களில் தற்சமயம் வண்டல் படிவுகள் அகற்றப்படுகின்ற மற்றும் புனரமைப்புச் செய்யப்படுகின்ற குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள குளங்களுக்கு மத்தியில் தற்சமயம் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்ந்தும் புனரமைப்புச் செய்யப்படவுள்ள குளங்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2622/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஒரு லீற்றர் திரவப் பாலின் விலை மிகவும் உயர்வடைந்துள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) திரவப் பால் பயன்பாட்டை பிரபல்யப்படுத்துவதற்கும் நிவாரண விலையில் விற்பனை செய்வதற்கும் வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பால் பண்ணையாளர்களுக்கு கறவைப் பசுக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கறவைப் பசுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி கறவைப் பசுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?